முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 63 - முயற்சியாண்மைக் கல்வி

## புள்ளி வழங்கும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 63 - முயற்சியாண்மைக் கல்வி

## புள்ளி வழங்கும் திட்டம்

பத்திரம் I 01 x 40 = 40 புள்ளிகள்

பத்திரம் II

**வினா இலக்கம் 01**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02
(vi). - 02
(vii). - 02
(viii). - 02
(ix). - 02
(x). - 02 Q1 = 20 புள்ளிகள்

**வினா இலக்கம் 02**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02 Q2 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 03**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02 Q3 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 04**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02 Q4 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 05**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02 Q5 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 06**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02 Q6 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 07**

Q7 = 10 புள்ளிகள்

## இறுதிப் புள்ளி கணித்தல்

| | | | |
|---|---|---|---|
| பத்திரம் | I | மொத்தம் | 40 புள்ளிகள் |
| பத்திரம் | II | மொத்தம் | 60 புள்ளிகள் |
| | | | 100 புள்ளிகள் |

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022 (2023)

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர்கள் ஊதா நிறக் குமிழ் முனை பேனாவினை விடைத்தாள்களை புள்ளியிடுவதற்குப் பயன்படுத்தவும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்களை எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கருப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ $\frac{4}{5}$

(ii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ $\frac{3}{5}$

(iii) ..............................................................................
..............................................................................
.............................................................................. ✓ $\frac{3}{5}$

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள்**

01 **துளைத்தாள் தயாரித்தல்**

i. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.
ii. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.
iii. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.
iv. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.
v. **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ✗ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

### கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிட்டு பிழையிடவும் புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும் அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தப்புள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்

* புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

i. ஒருவினாப்பத்திரம் உள்ளபாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

ii. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

iii. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் "Total Marks" என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும்** எழுத வேண்டும்.

iv. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலிலை தயார் செய்யும் போது பகுதிப்புள்ளிகளை பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "Total Marks" என்ற நிரலில் பதியவும்.

v. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

vi. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ்வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

1. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் அல்லது பின்னத்தில் **பதியப்படலாகாது.**
2. புள்ளி பட்டியலில் சகல பக்கங்களிலும் புள்ளிகளை பதிந்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்பார்த்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளை பரீட்சிக்கும் எண்கணித பரீட்சகர் (EMF) மற்றும் பிரதம பரீட்சகர் ஆகியோர் தமது குறியீட்டு இலக்கத்தையும் கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

○ ○ ○

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## முயற்சியாண்மைக் கற்கை I

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

**1.** முயற்சியாண்மையை இனங்காண முடிவது
(1) பெறுமதிமிக்க எண்ணமாகவாகும்.
(2) அறிவுடன் மட்டும் தொடர்புடைய ஒன்றாகவாகும்.
(3) நபருடன் மட்டும் தொடர்புடைய ஒரு மனோநிலையாகவாகும்.
(4) வெற்றிக்கு அத்தியாவசியமான ஒன்றாகவாகும்.

**2.** புத்துருவாக்கங்களை உருவாக்குவதற்கு முயற்சியாளரினுள் இருக்கவேண்டிய அடிப்படைப் பண்பு
(1) ஆக்கத்திறன் சிந்தனை (2) சூழல் பகுப்பாய்வு
(3) அர்ப்பணிப்பு (4) தூரநோக்கு

**3.** நிமலனும் சுகந்தனும் நண்பர்கள் ஆவர். நிமலன் இறக்குமதி செய்யப்பட்ட மின்குமிழ்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்துள்ள அதேவேளை சுகந்தன் பிளாஸ்டிக் கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தி பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தார். இங்கு குறிப்பிடப்படும்
(1) நிமலன், சுகந்தன் இருவரும் முயற்சியாளர்கள் ஆவர்.
(2) நிமலன், சுகந்தன் இருவரும் வணிகர்கள் ஆவர்.
(3) நிமலன் முயற்சியாளராக இருக்கும் அதேவேளை சுகந்தன் வணிகர் ஆவர்.
(4) சுகந்தன் முயற்சியாளராக இருக்கும் அதேவேளை நிமலன் வணிகர் ஆவர்.

**4.** தனது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சுய - கட்டுப்பாட்டுடன் பணிபுரிபவர் முயற்சியாளர் ஆவார். இதனை இனங்காண முடிவது,
(1) தூரநோக்கு எனவாகும். (2) நெகிழ்வுத்தன்மை எனவாகும்.
(3) நம்பிக்கையுடன் இருத்தல் எனவாகும். (4) சுதந்திரமானது எனவாகும்.

**5.** சமூக நலன்புரிக்கான முயற்சியாளரின் பங்களிப்பாக அமைவது
(1) அதிக எண்ணிக்கையான மக்களுக்கு வேலை வழங்குதல்
(2) ஊழியர்களுக்கு உயர்வான சம்பளத்தை வழங்குதல்
(3) ஊழியர்களுக்கு அதிகளவான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்
(4) வாடிக்கையாளர்களுக்கு கழிவுகளை வழங்குதல்

**6.** தர விருதுகளைப் பெற்றுக்கொள்ளும் அரச நிறுவனங்களின் தலைவர்களை இனங்காண முடிவது
(1) சமூக முயற்சியாளர்களாக (2) வணிக முயற்சியாளர்களாக
(3) அக முயற்சியாளர்களாக (4) பொருளாதார முயற்சியாளர்களாக

7. முயற்சியாளர் ஒருவரின் தலைவர் வகிபாகத்தில் நிறைவேற்றப்படும் பணிக்கான உதாரணமாக அமைவது
   (1) வணிகத்துக்குத் தேவையான மூலதனத்தை வழங்குதல்
   (2) தேவையான நடவடிக்கைளுக்காக ஊழியர்களுக்கு வழிகாட்டுதல்
   (3) வணிகத் திட்டத்திற்கு அமைவாக வணிக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா எனக் கண்டறிதல்
   (4) வணிகத்துக்கு தேவையான மானிட, பௌதீக வளங்களை வழங்குதல்

8. இலங்கையில் காணப்படும் இயற்கை வளங்களை அதிகமாகப் பயன்படுத்தும் வணிகமொன்று
   (1) தென்னை தொடர்புடைய உற்பத்தி வணிகம்
   (2) ஆபரண / நகை வணிகம்
   (3) சுற்றுலா வணிகம்
   (4) கால்நடை உணவு தயாரிக்கும் வணிகம்

9. சுகிர்தா எப்பொழுதும் நெகிழ்வுத்தன்மையுடைய திட்டத்தை நிறுவனத்தில் பேணுகின்றார். இது சுகிர்தாவின் வணிகத்திற்கு,
   (1) பலவீனம் ஆகும். (2) பலம் ஆகும். (3) சவால் ஆகும். (4) அச்சுறுத்தல் ஆகும்.

10. சிற்றளவு வணிகங்கள் தமது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, பெரும்பாலும் கருத்திற் கொள்வது,
   (1) அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களை ஆகும்.
   (2) போட்டித் தன்மையை ஆகும்.
   (3) உள்ளூர் அறிவு மற்றும் வளங்களை ஆகும்.
   (4) தலைமைத்துவத்தின் ஆற்றலை ஆகும்.

11. முயற்சியாளர் ஒருவரால் தமது வணிகத்தில் மனித வளங்களை சரியான முறையில் கையாள்தல், ஊக்குவித்தல், தேவைக்கேற்ற வகையில் அவை மீது செல்வாக்குச் செலுத்தல் போன்ற பணிகளை நிறைவேற்றும் வகிபாகமாக இனங்காணப்படுவது,
   (1) வணிக உரிமையாளர் (2) முகாமையாளர்
   (3) தலைவர் (4) வணிகர்

12. சிற்றளவு வணிகம் ஒன்றில் **காணமுடியாத** ஒரு பண்பு
   (1) குறைந்தளவு மூலதனம் முதலீடு செய்யப்பட்டிருத்தல்
   (2) தீர்மானங்கள் எடுப்பதில் சிரமமாயிருத்தல்
   (3) ஊழியர்கள் எண்ணிக்கை குறைவாக இருத்தல்
   (4) உடைமை ஒரு நபருக்கு உரியதாக இருத்தல்

13. தற்போது பெரும்பாலான உணவு தயாரிக்கும் வணிகங்கள், தமது தயாரிப்புக்களை வாடிக்கையாளரின் கட்டளைக்கிணங்க அவர்களது வீடு வரை கொண்டு சென்று விநியோகிக்கின்றனர். இது,
   (1) முதனிலை வணிகத்துறைக்கு உரியதாகும்.
   (2) இரண்டாம் நிலை வணிகத்துறைக்கு உரியதாகும்.
   (3) மூன்றாம் நிலை வணிகத்துறைக்கு உரியதாகும்.
   (4) உற்பத்தித் துறைக்கு உரியதாகும்.

14. இலங்கையில் முயற்சியாளர்கள் மீது தற்போது செல்வாக்குச் செலுத்தியுள்ள ஒரு பொருளாதாரச் சூழல் காரணி
   (1) போட்டியாளர்கள் தமது தந்திரோபாயங்களை மாற்றுதல்
   (2) வட்டி வீதங்கள் அதிகரித்தல்
   (3) சனத்தொகையில் வயது முதிர்ந்தோர் தொகை அதிகரித்தல்
   (4) இணையச் சேவைகளூடாக வெளிநாட்டுச் சந்தைகளில் நுழைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தல்

15. அமலன் என்பவர் சைவர்களுக்காக புதிய வகையான சொசேஜ் ஒன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தத் தீர்மானித்தார். இங்கு அமலன் பிரதானமாகக் கருத்திற் கொண்டது,
   (1) மக்கட்தொகைச் சூழலை ஆகும். (2) பொருளாதாரச் சூழலை ஆகும்.
   (3) இயற்கைச் சூழலை ஆகும். (4) சமூக கலாசாரச் சூழலை ஆகும்.

16. இலங்கையில் தற்போது வணிகங்கள் மீது பெரும்பாலும் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசியல் மற்றும் சட்டச் சூழல் காரணி
   (1) வட்டி வீதங்கள் மாற்றமடைதல் (2) வரி வீதங்கள் மாற்றமடைதல்
   (3) தகவல் தொழினுட்பம் முன்னேற்றமடைதல் (4) சம்பள மட்டம் அதிகரித்தல்

**17.** அரிசி உற்பத்தி செய்து விநியோகிக்கும் வணிகமொன்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் அகச் சூழல் காரணியாக அமைவது,

(1) அரிசியை நுகர்வோரது வாழ்க்கைத் தரம் குறைவடைதல்
(2) அரிசி இறக்குமதியை மட்டுப்படுத்தல்
(3) வரட்சி காரணமாக நெல் உற்பத்தி வீழ்ச்சியடைதல்
(4) நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியங்களின் பற்றாக்குறை

**18.** முயற்சியாளர் ஒருவரினுள் வணிக எண்ணங்கள் தோன்றுவதற்கு விருப்புடன் இருக்க வேண்டிய அத்தியாவசிய பண்பு

(1) சுதந்திரம் (2) நம்பிக்கையுடன் இருத்தல்
(3) ஆக்கத்திறன் (4) நெகிழ்வுத்தன்மை

**19.** கடந்த கால வணிகச் சூழலுடன் நவீன வணிகச் சூழலை ஒப்பிடும்போது, நவீன வணிகச் சூழலுடன் தொடர்புடைய மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) மாற்றமடையும் வேகம் அதிகரித்தல், போட்டி குறைவடைதல், நுகர்வோர் சக்தி வாய்ந்தவர்களாதல்.
(2) மாற்றமடையும் வேகம் அதிகரித்தல், போட்டி அதிகரித்தல், வணிகர்கள் சக்தி வாய்ந்தவர்களாதல்.
(3) மாற்றமடையும் வேகம் அதிகரித்தல், போட்டி அதிகரித்தல், நுகர்வோர் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாதல்.
(4) மாற்றமடையும் வேகம் அதிகரித்தல், போட்டி அதிகரித்தல், பூகோளரீதியில் பரவாதிருத்தல்.

**20.** கவின் என்பவர் இணையத்தைப் பயன்படுத்தி சேட், நீளக் காற்சட்டைகள் போன்றவற்றுக்கு கட்டளைகளைப் பெற்று வீடுகளுக்கு விநியோகிக்கின்றார். இது,

(1) தற்போது காணப்படும் உற்பத்திப்பொருளை தற்போது காணப்படும் சந்தைக்கு முன்வைத்தலாகும்.
(2) தற்போது காணப்படும் உற்பத்திப்பொருளை புதிய சந்தைக்கு முன்வைத்தலாகும்.
(3) புதிய உற்பத்திப்பொருளைத் தற்போது காணப்படும் சந்தைக்கு முன்வைத்தலாகும்.
(4) புதிய உற்பத்திப்பொருளை புதிய சந்தைக்கு முன்வைத்தலாகும்.

**21.** வணிக நிறுவனமொன்றில் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்தலும், விநியோகித்தலும் மற்றும் விலையை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கல்வாங்கல்கள் செய்தலும் கருதப்படுவது,

(1) நிதிக் கொடுக்கல்வாங்கலாக
(2) பொருளாதார நடவடிக்கையாக
(3) இடர்களுடன் கூடிய நடவடிக்கையாக
(4) கொடுக்கல்வாங்கல்களில் வளங்களை வெளிக்கொண்டு வருதலாக

**22.** முயற்சியாளரினால் தனது நிறுவனத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும், அவற்றை அடைவதற்கான வழிவகைகளையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கும் அறிக்கை

(1) வணிகத் திட்டம் ஆகும். (2) நிதித் திட்டம் ஆகும்.
(3) வரவுசெலவுத் திட்டம் ஆகும். (4) முதலீட்டு எதிர்வுகூறல் திட்டம் ஆகும்.

**23.** நவீன் என்பவர் இணையவழியைப் (online) பயன்படுத்தி தனியான கற்பித்தல் வணிகமொன்றை ஆரம்பிக்க எண்ணுகிறார். இதற்கு மிகவும் பொருத்தமான இடம்,

(1) பாடசாலைக்கு அருகாமையிலுள்ள கட்டடம்
(2) போக்குவரத்து வசதிகள் காணப்படக்கூடிய கட்டடம்
(3) தனது வீட்டில் காணப்படும் அமைதியான அறை
(4) சனநெரிசல் மிக்க நகரத்திலுள்ள சிறப்புச் சந்தைக் கட்டடத்தின் ஒரு பகுதி

**24.** ஓய்வு பெற்ற நபர்களுக்கான 'கவனிப்பு நிலையங்களை' ஆரம்பித்தல் ஒரு,

(1) தனித்தவமான புதிய சேவை முன்வைப்பாகக் கருதப்படலாம்.
(2) உற்பத்தி பேதப்படுத்தலைப் பயன்படுத்தும் முன்வைப்பாகக் கருதப்படலாம்.
(3) சந்தை இடைவெளிக்கான சேவை முன்வைப்பாகக் கருதப்படலாம்.
(4) புத்துருவாக்க முன்வைப்பாகக் கருதப்படலாம்.

**25.** சூழல் மாசடைதலைக் குறைப்பதன் மூலம் வணிகமொன்று பூர்த்தி செய்வது

(1) பொதுநல பொறுப்பை ஆகும். (2) ஒழுக்கவியல் பொறுப்பை ஆகும்.
(3) பொருளாதாரப் பொறுப்பை ஆகும். (4) சட்டரீதியான பொறுப்பை ஆகும்.

**26.** வணிகமொன்றினால் பூர்த்தி செய்யப்படும் சட்டரீதியான பொறுப்பு
(1) ஊழியர்களுக்கான பயிற்சியும் அபிவிருத்தியும்
(2) உற்பத்திப்பொருட்களின் தரத்தை முன்னேற்றுதல்
(3) ஊழியர் சேமலாப நிதியத்தை ஒழுங்காகச் செலுத்துதல்
(4) சமூகத்திற்கான கல்வி மற்றும் சுகாதார நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்குதல்

**27.** பங்குடைமை வணிகத்தில் இருந்து தனியுடைமை வணிகம் வேறுபடுவது
(1) பொறுப்பின் மூலம்　　(2) உளதாந்தன்மையின் மூலம்
(3) உடைமையின் மூலம்　　(4) பதிவு செய்தலின் மூலம்

**28.** தற்காலத்தில் அமுல்படுத்தப்படும் சுயசேவைச் சந்தைப்படுத்தல் முறை ஒரு புத்தாக்கம் ஆகும். இதனை
(1) புதிய கண்டுபிடிப்பாகக் கருதலாம்.
(2) தற்போதைய சேவையின் நீட்சியாகக் கருதலாம்.
(3) பிரதி பண்ணுதலாகக் கருதலாம்.
(4) கலவையாகக் கருதலாம்.

**29.** 'பிரச்சினைகளையும் வாய்ப்புக்களையும் நோக்கி அவற்றுக்கான தீர்வாக புதிய எண்ணங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஆற்றல்'
(1) ஆக்கத்திறன் என இனங்காணப்படும்.
(2) புத்துருவாக்கம் என இனங்காணப்படும்.
(3) இடர்பை ஏற்றலாக இனங்காணப்படும்.
(4) நம்பிக்கையாக இருத்தல் என இனங்காணப்படும்.

**30.** தற்போது அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பரிமாற்றுப் பெறுமதி மாற்றமடைவதுடன் தொடர்புடையது
(1) மக்கட்தொகை சூழல்　　(2) பொருளாதாரச் சூழல்
(3) அரசியல் மற்றும் சட்ட சூழல்　　(4) பூகோளச் சூழல்

**31.** வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய அங்கத்தவர் எண்ணிக்கை முறையே,
(1) 1 உம் 20 உம் ஆகும்.　　(2) 2 உம் 20 உம் ஆகும்.
(3) 1 உம் 50 உம் ஆகும்.　　(4) 2 உம் 50 உம் ஆகும்..

**32.** சுந்தரம் தனது பிரதேசத்தில் சில்லறைக் கடை ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றார். அவருடைய உத்தேச வணிகத்திற்கான வாய்ப்பாக அமைவது,
(1) வணிகத்தில் முதலீடு செய்வதற்கு அவசியமான பணத்தை வைத்திருத்தல்.
(2) வணிக முகாமைத்துவம் தொடர்பில் நல்ல அறிவைக் கொண்டிருத்தல்.
(3) அவரது பிரதேசத்தில் செயற்பட்ட ஒரே ஒரு சில்லறைக் கடை மூடப்படுதல்.
(4) வணிகங்களின் மீதான வரிக் கட்டணங்கள் அரசாங்கத்தினால் அதிகரிக்கப்படுதல்.

**33.** அமரன் தனது வணிகத்தின் பெயரில் வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்தபோது வங்கி அதனை நிராகரித்ததுடன் அவரது பெயரில் கடன் தரமுடியும் எனக் கூறியது. இதற்கான காரணம்
(1) வணிகத்தின் உடைமையானது தனிநபருக்கு சொந்தமாக இருத்தல்.
(2) வணிகமானது பதிவு செய்யப்படாதிருத்தல்.
(3) வணிகத்துக்கு சட்ட ஆளுமை இல்லாதிருத்தல்.
(4) வணிகத்துக்கு நீடித்துழைக்கும் தன்மை இல்லாதிருத்தல்.

**34.** முயற்சியாண்மையில் உயர்வான செயற்திறன், நிச்சயமற்ற எதிர்காலம் மற்றும் போட்டித்தன்மை போன்ற காரணிகள் கருதப்படுவது,
(1) சூழல் காரணிகளாக　　(2) சவால் காரணிகளாக
(3) உற்பத்திக் காரணிகளாக　　(4) அகக் காரணிகளாக

**35.** பிரேரிக்கப்பட்ட உற்பத்தி வணிகம் ஒன்றிற்கான நீர் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான செலவு
(1) உற்பத்திக் கிரயம் ஆகும்.
(2) நிர்வாகச் செலவு ஆகும்.
(3) ஆரம்பிக்க முன்னரான செலவு ஆகும்.
(4) நாளாந்த வணிக நடவடிக்கைகளுக்காக வேண்டப்படும் செலவு ஆகும்.

**36.** உற்பத்தி மற்றும் வியாபார வணிகம் ஒன்றின் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற நிலையான சொத்து

(1) தொழிற்சாலைக் கட்டடங்கள் ஆகும்.

(2) அலுவலக தளபாடங்கள் ஆகும்.

(3) பொருட்களை விநியோகிக்கப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் ஆகும்.

(4) பொருட்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் பொறி உபகரணங்கள் ஆகும்.

**37.** பிரேரிக்கப்பட்ட வணிகமொன்றின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைக் கணிப்பிடும் கூற்றைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் காசு உட்பாய்ச்சல்

(1) உடைமையாளரது முதலீடு ஆகும்.

(2) வங்கிக் கடன்கள் ஆகும்.

(3) எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் ஆகும்.

(4) கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ஆகும்.

**38.** பிரேரிக்கப்பட்ட ஆடைக் கைத்தொழில் வணிகத்தின் தொழிற்சாலை ஊழியர் சம்பள மதிப்பீடு உள்ளடக்கப்படுவது

(1) நிதித் திட்டத்தில் (2) உற்பத்தித் திட்டத்தில)

(3) நிர்வாகத் திட்டத்தில் (4) சந்தைப்படுத்தல் திட்டத்தில்

**39.** வணிகத் திட்டமொன்றின் கூறுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A - போட்டியாளர்கள்

B - வணிகப் பதிவுக் கட்டணம்

C - தொழிற்படு மூலதனம்

D - விளம்பரப்படுத்தற் செலவுகள்

E - அலுவலக ஊழியரது சம்பளம்

மேலே தரப்பட்ட தகவல்களில் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்படுபவை எவை?

(1) A, B (2) A, D (3) B, C (4) D, E

**40.** சிறுவர்களுக்கான ஆடைகளைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பிக்க சரண்யா தீர்மானித்தார். அவளது முதலாவது மாதத்திற்கான மதிப்பீட்டில் உள்ளடங்கிய சில செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| துணிகள் மற்றும் ஏனைய மூலப்பொருட்களுக்காக | ரூ. 120 000 |
| ஊழியர் சம்பளத்திற்காக | ரூ. 50 000 |
| வாடகை மற்றும் மின்சாரத்திற்காக | ரூ. 60 000 |
| வணிகத் திட்டத்தை தயாரிப்பதற்கான செலவு | ரூ. 10 000 |

இத் தகவல்களின் பிரகாரம் சரண்யாவின் உத்தேச வணிகத்தின் மதிப்பிடப்பட்ட நாளாந்த வணிக நடவடிக்கைகளுக்கான செலவு (தொழிற்படு மூலதனம்)

(1) ரூ. 240 000 (2) ரூ. 230 000 (3) ரூ. 170 000 (4) ரூ. 110 000

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 63 | විෂයය<br>பாடம் | முயற்சியாண்மைக் கற்கை |
|---|---|---|---|

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 03 | 11. | 03 | 21. | 02 | 31. | 03 |
| 02. | 01 | 12. | 02 | 22. | 01 | 32. | 03 |
| 03. | 04 | 13. | 03 | 23. | 03 | 33. | 03 |
| 04. | 04 | 14. | 02 | 24. | 03 | 34. | 02 |
| 05. | 01 | 15. | 04 | 25. | 04 | 35. | 03 |
| 06. | 03 | 16. | 02 | 26. | 03 | 36. | 03 |
| 07. | 02 | 17. | 04 | 27. | 03 | 37. | 03 |
| 08. | 03 | 18. | 03 | 28. | 02 | 38. | 02 |
| 09. | 02 | 19. | 03 | 29. | 01 | 39. | 02 |
| 10. | 03 | 20. | 02 | 30. | 02 | 40. | 02 |

❖ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

1. பின்வரும் சம்பவக் கற்கையை கவனமாக வாசித்து, (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

யுதேஷ் என்பவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரிகின்றார். அவர் புதிய விடயங்களைச் செயற்படுத்த விரும்பியபோதிலும், அவரது வேலையின் காரணமாக அதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. யுதேஷின் தந்தையான குமார் புடவைக் கடை ஒன்றை வைத்திருக்கின்றார். குமார் இதனைத் தனது தந்தையாரிடமிருந்து பெற்றுக் கொண்டதால், இந்த வணிகத்தில் எதுவித மாற்றங்களையும் செய்வதற்கு விரும்பவில்லை. தனது தந்தை வணிகத்தை நடத்திய முறையிலேயே குமாரும் இந்த வணிகத்தை நடத்தியதனால் தனது மகனான யுதேஷ் வழங்கிய புதிய எண்ணங்களைக் கூட ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

யுதேஷ் தனது வேலையிலிருந்து வெளியேறி 'விலாசிதா' என்ற பெயரில் பெண்களுக்கான ஆடைகளைத் தயாரிக்கும் வணிகமொன்றை தனது மனைவியான நயனாவின் உதவியுடன் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளார். யுதேஷின் மனைவியான நயனா பெண்களுக்காக ஆடைகளை நவீன பாணியில் வடிவமைக்கும் ஆக்கத்திறனைக் கொண்டுள்ளார். யுதேஷ் மற்றும் நயனா ஆகியோர் முறையே ரூ 500 000, ரூ 300 000 பணத்தை வணிகத்தில் முதலீடு செய்ய உடன்பட்டனர்.

வாடகைக்கு எடுத்த கட்டடமொன்றில் வணிகத்தை நடாத்தவும், இரண்டு தையல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும், ஆடைகளைத் தைப்பதற்காக இரண்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்தவும், தமது தயாரிப்புக்களை தமது தந்தையின் புடவைக் கடையில் விற்பனை செய்வதற்கும் இணையத்தின் ஊடாக கட்டளைகளைப் பெற்று அவற்றை விநியோகிப்பதற்கும் யுதேஷ் எதிர்பார்க்கின்றான்.

(i) யுதேஷ் கொண்டிருக்கும் முயற்சியாண்மைப் பண்புகள் இரண்டைக் குறிப்பிட்டு, அவற்றை சம்பவக்கற்கையிலிருந்து உதாரணங்களைத் தருவதன் மூலம் நிரூபிக்குக.

(ii) குமார் வணிகராக உள்ளாரே அன்றி ஒரு முயற்சியாளர் இல்லை என்பதைக் காட்டும் **இரண்டு** காரணிகளை எழுதுக.

(iii) தனியார் நிறுவனத்தில் பணி புரிவதிலும் பார்க்க வணிகத்தை ஆரம்பிப்பதன் மூலம் யுதேஷ் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்கள் **இரண்டு** எழுதுக.

(iv) யுதேஷ், தான் பிரேரித்த வணிகத்தை ஆரம்பிப்பதற்கு தெரிவுசெய்யக்கூடிய வணிக அமைப்பு வகையைப் பெயரிட்டு, இவ் வணிக அமைப்பு வகையின் **இரண்டு** அனுகூலங்களை எழுதுக.

(v) பிரேரித்த வணிகத்தின் தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்கு யுதேஷ் பயன்படுத்த எதிர்பார்க்கும் சந்தைப்படுத்தல் உபாய வழிகள் **இரண்டு** எழுதுக.

- யுதேஷின் உத்தேச வணிகத் திட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| <u>உருப்படி :</u> | ரூ. |
|---|---|
| இரண்டு தையல் இயந்திரங்கள் கொள்வனவு | 350 000 |
| வணிகத் திட்டம் தயாரித்தல் | 20 000 |
| வணிகத்தைப் பதிவு செய்தல் | 30 000 |
| **முதல் மாதத்திற்கான செலவுகள் :** | |
| துணிகளும் ஏனைய மூலப் பொருட்களும் | 255 000 |
| இரண்டு ஊழியர்களினதும் சம்பளம் | 50 000 |
| நிர்வாக மற்றும் விநியோகித்தற் செலவுகள் | 95 000 |
| முதல் மாதத்திற்கான விற்பனை வருமானம். | 580 000 |

**வேண்டப்படுவது :** யுதேஷின் உத்தேச வணிகத்தின் பின்வருவன

(vi) மொத்த முதலீடும் மொத்த சொத்துக்களும்

(vii) இரண்டு காசு உட்பாய்ச்சல்களும் இரண்டு காசு வெளிப் பாய்ச்சல்களும்

(viii) மொத்த உற்பத்திக் கிரயம்

(ix) ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகள்

(x) முதல் மாதத்திற்கான தேறிய இலாபம்.

(02 × 10 = 20 புள்ளிகள்)

பகுதி II

i. - ஆக்கத்திறன் - புதிய விடயங்களைச் செயற்படுத்த விரும்புதல்.
- புத்துருவாக்கம் - மாற்றமொன்றை ஏற்படுத்த விரும்புதல்.
- சுதந்திரமாகச் செயற்படல் - வேலையில் இருந்து விலகி புதிய முயற்சியில் ஈடுபட்டமை
- புதிய சிந்தனை
- வேறு பொருத்தமான விடைகள்

(பண்புகள் இரண்டிற்கு 1 /2 x 2 = 1 புள்ளி)
(உதாரணங்கள் இரண்டிற்கு 1 /2 x 2 = 1 புள்ளி)
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

ii. - தந்தை நடத்திய முறையிலேயே வணிகத்தை நடத்தியமை.
- வணிகத்தின் எவ்வித மாற்றமும் செய்ய விரும்பாமை.
- யுதேஷ் வழங்கிய புதிய எண்ணங்களை ஏற்றுக்கொள்ளாமை.
- ஏனைய பொருத்தமான விடைகள்

(1 x 2 = 2 புள்ளிகள்)

iii. - கவர்ச்சிகரமான இலாபம் உழைத்தல்.
- தன்னிறைவு நிலை.
- பயன்படுத்தாத ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ள முடிதல்.
- சுதந்திரமும் மிக உயர்ந்த ஆத்ம திருப்திக்கும் உள்ளாதல்.
- வளர்ச்சியின் பொருட் டு ஆட்களுக்குக் கிடைக்கின்ற உயர்ந்த பட்சமான வாய்ப்புக்கள்.
- தனிநபர் ஒருவரின் தலைவிதியானது அவரிடத்திலே இருப்பது.
- பணிகளில் வேற்றுமைகள் உருவாகின்றமை .
- சமூக நலன் பொருட்டு பங்களிப்புச் செய்யக் கிடைக்கின்றமை.

(1 x 2 = 2 புள்ளிகள்)

iv. பங்குடைமை வணிகம் / தனியார் கம்பணி
- இலகுவாக ஆரம்பிக்கக் கூடியதாக இருத்தல்.
- அதிக மூலதனத்தைத் திரட்ட முடியும்.
- கூட்டாகத் தீர்மானங்களை மேற்கொள்ள முடிதல்
- பங்குடமை வணிகத்தின் பொறுப்புக்கள் பங்காளரிடையே பகிரப்படல்
- பங்காளர்களிடம் காணப்படுகின்ற பல்வேறு ஆற்றல்களைப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்.

* தனியார் கம்பனி எனின் அதன் அனுகூலங்கள் காட்டப்படல் வேண்டும்.

வணிக அமைப்பிற்கு 1 புள்ளி
அனுகூலங்கள் (1 /2 x 2 = 1 புள்ளி)
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

v. - தந்தையின் புடவைக்கடையில் விற்பனை செய்தல்.
- இணையத்தினூடாகக் கட்டளை பெற்று விநியோகித்தல்.

(1 x 2 = 2 புள்ளிகள்)

vi. மொத்த முதலீடு ரூபா. 800000 (01 புள்ளி)

**அல்லது**

| | | | |
|---|---|---|---|
| யுதேஷ் | ரூ. 500 000 | 1/2 | 01 |
| நயனா | ரூ. 300 000 | 1/2 | |
| | ரூ. 800 000 | | |

மொத்த சொத்துக்கள் ரூபா. 800000 (01 புள்ளி)

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

vii. **காசு உட்பாய்ச்சல்கள்**

| | | |
|---|---|---|
| விற்பனை வருமானம் | ரூபா. | 580 000 |
| யுதேஷ் முதலிட்ட பணம் | ரூபா. | 500 000 |
| நயனா முதலிட்ட பணம் | ரூபா. | 300 000 |

**(1/2x 2 = 01 புள்ளி)**

**காசு வெளிப்பாய்ச்சல்**

| | | |
|---|---|---|
| தையல் இயந்திரங்கள் கொள்வனவு | ரூபா. | 350 000 |
| வணிகத் திட்டம் தயாரித்தல் | ரூபா. | 20 000 |
| துணிகளும் ஏனைய மூலப்பொருட்களும் | ரூபா. | 255 000 |
| ஊழியர்களின் சம்பளம் | ரூபா. | 50 000 |
| நிர்வாக மற்றும் விநியோகச் செலவுகள் | ரூபா. | 95 000 |
| வணிகத்தை பதிவு செய்தல் | ரூபா. | 30 000 |

**(1/2 x 2= 01 புள்ளி)**
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

viii. **மொத்த உற்பத்திக் கிரயம்** ரூபா. 305 000 (02 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| துணிகளும் ஏனைய மூலப்பொருட்களும் | ரூபா. | 255 000 |
| ஊழியர்களின் சம்பளம் | ரூபா. | 50 000 |

**அல்லது**

| | | |
|---|---|---|
| துணிகளும் ஏனைய மூலப்பொருட்களும் | ரூபா. | 255 000 |
| ஊழியர்களின் சம்பளம் | ரூபா. | 50 000 |

**(1/2 x 2= 01 புள்ளி)**

ix. **ஆரம்பிக்க முன்னரான செலவுகள்** ரூபா. 50 000 (02 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| வணிகத் திட்டம் தயாரித்தல் | ரூபா. | 20 000 |
| வணிகத்தை பதிவு செய்தல் | ரூபா. | 30 000 |

**அல்லது**

வணிகத் திட்டம் தயாரித்தல் ரூபா. 20 000

வணிகத்தை பதிவு செய்தல் ரூபா. 30 000

(1/2 x 2= 01 புள்ளி)

(மொத்தம் 02 புள்ளிகள்)

X. தேறிய இலாபம் ரூபா. 180 000 (02 புள்ளிகள்)

**அல்லது**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனை வருமானம் | | 580 000 (1/2) |
| **மொத்த உற்பத்திக் கிரயம்** | | |
| துணிகளும் ஏனைய மூலப்பொருட்களும் | 255 000 (1/2) | (305 000) |
| ஊழியர்களின் சம்பளம் | 50 000 (1/2) | |
| **மொத்த உற்பத்தியல்லாக் கிரயம்** | | |
| நிர்வாக மற்றும் விநியோக கிரயம் | 95 000 (1/2) | (95 000) |
| தேறிய இலாபம் | | 180 000 |

(மொத்தம் 02 புள்ளிகள்)

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) | (viii) | (ix) | (x) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 20/20 |

(iv) தொழிநுட்பத் திறன்கள்

உ +ம் -

- வணிகத்திற்காக வாங்கிய இயந்திரத்தைச் சரியான இடத்தில் பொருத்துதல், இயக்குதல், பழுதுபார்த்துப் புதுபித்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்வதற்குப் போதுமான திறன்கள்

- தெளிவான ஆட்சேர்க்கும் முறையைப் பேணிக்கொண்டு மிகவும் சிறந்த ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இருக்கின்ற திறன்கள்

மானிடத் திறன்கள்

உ +ம் -

வணிகத்தில் தனிப்பட்ட குழுக்களுடன் வேலை செய்யும் போது தனது கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்ளல், அவர்களிடம் வேலைகளை ஒப்படைத்தல், ஊழியர்களை ஊக்கப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை செய்யகூடிய திறன்கள்.

எண்ணகரு ரீதியான திறன்கள்

உ +ம் -

புதிய உற்பத்திகளை உற்பத்தி செய்தல், புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடிக்கொள்ளல், வணிகத்தின் போட்டி தன்மைக்கு முகம் கொடுத்தல்

குழுக்களுடன் செயற்படும் திறன்கள்

உ +ம் -

குழுக்களின் வேலை முறைமை

குழுக்களின் உணர்வுகள்

தொடர்பாடல் திறன்கள்

உ +ம் -

கூட்டம் நடத்துதல், தகவல்களை பரிமாற்றுதல், தேவையான தரப்பினர்களுக்கு குறித்த தகவல்கள் மற்றும் அறிக்கைகளைப் பகிர்ந்தளித்தல்.

ஆலோசனைத் திறன்கள்

உ +ம் -

ஊழியர்களின் தனிப்பட்ட பிரச்சனைகள் மற்றும் ஊழியர்களுக்கு இடையே உருவாகின்ற முரண்பாடுகள், நலன்புரி தொடர்பில் ஏற்படும் பிரச்சனைகளின் போது ஆலோசனை வழங்குதல்

முன்மாதிரியாகச் செயற்படும் திறன்கள்

உ +ம் -

- வணிகம் நட்டத்தில் இயங்கும் போது மனம் தளராது. வணிகத்தை துன்னேற்றுவதற்காக பாடுபடல்
- உரிய நேரத்திற்கு வேலைகளில் ஈடுப்படுதல்
- நியாயமான முறையில் செயற்படல்

**ஏதாவது திறன்கள் இரண்டிற்கு 01 புள்ளி**

**உதாரணம் இரண்டிற்கு 01 புள்ளி**

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

(v) - மூலதனத்தை பெறும் வழிகள்
- போட்டி நிலைமை
- இலக்குக்குட்பட்ட நுகர்வோர்
- வணிகத்திற்கு அடிப்படையான பொருள் / சேவை
- வணிகத்திற்குப் பொருத்தமான இடம்
- வணிகத்திற்கு எவ்வகையில் அர்ப்பணிக்க முடியும்?
- வருமானம் போதுமானதா?
- வணிகத்தை ஆரம்பிப்பது தனியாகவா அல்லது கூட்டாகவா?
- வணிகத்தினூடாகச் சமூகத்திற்கு எவ்வகையான பிரதிபலன்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

**(1/2x 4 = 02 புள்ளிகள்)**

Q2

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | 2 | 2 | 10/10 |

**3.** (i) இலங்கையில் கிடைக்கும் இயற்கை வளங்கள் **இரண்டைப்** பெயரிட்டு, அவை ஒவ்வொன்றின் மூலமும் உருவாக்கக்கூடிய ஒவ்வோர் வணிக வாய்ப்புக்களையும் குறிப்பிடுக.

(ii) மாறும் சூழலில் நிகழும் உண்மையான மாற்றங்களைப் புரிந்து கொள்வதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலங்கள் **இரண்டு** எழுதுக.

(iii) வணிகமொன்றின் தொழிற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் அகச்சூழல் காரணிகள் **இரண்டைப்** பெயரிட்டு, அவை எவ்வாறு வணிகத்திற்குப் பலமாக அமையும் என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(iv) முயற்சியாளர் முகங்கொடுக்கும் இடர் மற்றும் திரும்பல் (benefit) ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பை சுருக்கமாக விளக்குக.

(v) உடைமையாளர் வகிபாகத்தில் முயற்சியாளரால் நிறைவேற்றப்படும் தொழிற்பாடுகளுக்கான உதாரணங்கள் **நான்கு** தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

03. (i)

நீர் - விவசாயம்
நீர்வீழ்ச்சி - சுற்றுலா
ஆறு - விவசாயம்
கடல்- சுற்றுலா, விவசாயம்
மலைப்பிரதேசம் - விவசாயம், சுற்றுலா
ஆழமற்ற கடற்பகுதி - மீன்பிடி, களப்பு
வளமான மண் - விவசாய நடவடிக்கை
உயிரியல் பல்வகைமைச் சூழற்தொகுதி - சுற்றுலாக் கைத்தொழில்
மீன் இனங்கள் - மீன்பிடித்தொழில்
ஈரவலயக் காடுகள் - ஆயுர்வேத மருத்துவத் துறை
தாழ்நிலங்கள் - விவசாயம்
வேறு பொருத்தமான விடைகள்

**வளங்கள் இரண்டிற்கு 1/2 x2= 01 புள்ளி**
**வணிக வாய்ப்புக்கள் இரண்டிற்கு 1/2 x2= 01 புள்ளி**
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

(ii)
- வணிகத்திற்குரிய பலம், பலவீனங்களை இனங்காணல்
- வணிகத்தின் சவாலை இனங்காணல்
- பல்வகையான வணிக சந்தர்ப்பங்களை இனங்காணல்
- சூழல் மாற்றத்திற்குப் பொருத்தமான வகையில் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- சூழல் மாற்றங்களிற்கு அமைய திட்டங்களை வகுத்தலும் உபாய மார்க்கங்களை தீர்மானித்தலும்

**(1x2= 02 புள்ளிகள்)**

(iii) உரிமையாளர்

சிறந்த நிதிப் பலமுடைய உரிமையாளர் வணிகத்தின் பலம் ஆகும். அவ்வாறு உள்ள போது, இடையூறுகளின்றி வணிகத்திற்கு தேவையான வளங்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

ஊழியர்

நிறுவனத்தின் மீது விருப்போடும் நம்பிக்கையோடும் செயற்படும் ஊழியர்கள் அவ் வணிகத்தின் பலமாகும். அறிவு மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களால் வணிக கருமங்கள் உச்சநிலை அடையும்

முகாமையாளர்

முகாமையாளர்களின் அறிவு, தேர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் வணிகத்தின் வெற்றி தங்கியுள்ளது. ஆக்கபூர்வமான சிந்தனைகளைக் கொண்ட திறமையான முகாமையாளர் வணிகத்தறிகு பலம் ஆகும் .

வளம்

வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான போதுமான வளங்கள் புதிய நுட்பங்களைப் பிரயோகித்தலும் பலமாகும்.

புதிய வளப்பாவனை பிரயோகித்தல்

**காரணிகள் இரண்டிற்கு 1/2x 2= 01 புள்ளி**
**விளக்கங்கள் இரண்டிற்கு 1/2x 2= 01 புள்ளி**
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

(iv) நட்ட இடர் உயர்வாயின் இலாபம் உயர்வடையும்
நட்ட இடர் குறைவாயின் இலாபம் குறைவடையும்

**( 1x2 = 02 புள்ளிகள்)**

(v)
- நோக்கம், குறிக்கோள்களை தயாரித்தல்
- முக்கிய தீர்மானம் செய்தல்
- இலாப / நட்டதைப் பொறுபேற்றல்
- மூலதனம் இடுதல்
- வணிகத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல்
- வணிகத்திற்கு தேவையான வளங்களை ஈடுபடுத்தல்

**( 1x2 = 02 புள்ளிகள்)**

Q3

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | 2 | 2 | $\frac{10}{10}$ |

**4.** (i) வணிக அமைப்புகளை உடைமை அடிப்படையில் இரண்டு வகைகளாக வகைப்படுத்தலாம். அவ் **இரண்டு** வகைகளையும் பெயரிட்டு, அவற்றுக்கான ஒவ்வோர் உதாரணத்தைத் தருக.

(ii) ஒவ்வொரு வணிக அமைப்பிலும் காணக்கூடிய பொதுவான பண்புகள் **நான்கை** எழுதுக.

(iii) பங்குடைமை வணிகத்தின் பங்காளரிலும் பார்க்க தனியுடைமையின் உரிமையாளரால் பெற்றுக் கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்கள் எழுதுக.

(iv) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் பின்வரும் தொழிற்பாடுகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதனை சுருக்கமாக எழுதுக.

(அ) மூலதனத்தை திரட்டுதல்

(ஆ) முகாமை

(v) வணிகம் ஒன்றைத் தொடங்குவதற்கு முன்னர் 'வணிகத்தின் பெயருக்கான பதிவுச் சான்றிதழை' பெற்றுக் கொள்வதற்கு முயற்சியாளரால் எடுக்க வேண்டிய படிமுறைகளைக் குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

(i) தனியார்துறை வணிகம்

உ+ம் - தனியாளுரிமை வணிகம் / தனியுடமை வணிகம்

பங்குடைமை வணிகம்

கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

கூட்டுறவுச் சங்கம்

பொதுத் (அரச) துறை வணிகம்

உ+ம் - திணைக்களம்

அரச கம்பனி

அரச கூட்டுதாபனம்

உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

**வகைப்படுத்தலுக்கு 1/2 x 2 = 01 புள்ளி**

**உதாரணத்திற்கு 1/2 x 2= 01 புள்ளி**

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

(ii)
- பொது நோக்கமொன்று இருத்தல்
- வரையறுக்கப்பட்ட வளப்பாவனை
- பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல்
- நபர்கள் குழுவாக ஒன்றிணைந்து இருத்தல் (உரிமையாளர், ஊழியர்)
- ஒருமைப்பாட்டுடனான தொடர்பு காணப்படுதல்

**(1/2x4 = 02 புள்ளிகள்)**

(iii)
- வணிகத்தை ஆரம்பிப்பது இலகு
- சட்டக்கட்டுப்பாடுகள் குறைவு
- சகல இலாபமும் உரிமையாளருக்குரியது
- குறைந்த மூலதனத்துடன் ஆரம்பிக்க முடிதல்
- சுதந்திரமாகத் தீர்மானங்களை மேற்கொள்ள முடிதல்
- குடும்ப அங்கத்தவர்களைப் பங்கு பெறச் செய்யக் கூடியதாக இருத்தல்
- வணிகத்தின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படல்
- வணிகரின் முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின் மூலம் வணிகத்தை முன்னேற்றமடையச் செய்யலாம்

**( 1x2 = 02 புள்ளிகள் )**

(iv) (அ) மூலதனத்தை திரட்டுதல்

கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்குத் தேவையான மூலதனம் பங்கு மூலதனத்தினூடாகத் திரட்டப்படுதல்

(ஆ) முகாமை

கம்பனியின் நிர்வாகக் கருமங்கள் கம்பனியின் பங்குதரர்களாகிய உரிமையாளர்களால் தெரிவு செய்யப்படுகின்ற இயக்குனர் சபைனால் நிறைவேற்றப்படுகின்றன

**(1x2 = 02 புள்ளிகள்)**

(v) - வணிகத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் எல்லைப் பிரதேசத்திற்குரிய பிரதேச செயலகத்தில் கீழே குறிப்பிடப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளல்

* தனியுடைமை வணிகத்தின் பெயரை பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்படிவம்.

* வணிகத்தின் பெயரைப் பதிவதற்குத் தேவையான கிராம சேவகரின் அறிக்கைக்குரிய விண்ணப்பப்படிவம்

- கிராம உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்திய அறிக்கையையும் பூரணப்படுத்திய விண்ணப்படிவத்தையும் பதிவு செய்வதற்கான கட்டணத்தையும் சேர்த்து பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தல்

**(1/2x4 = 02புள்ளிகள்)**

Q4

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | 2 | 2 | 10/10 |

(iv)
- சந்தை காணப்படுதல்
- இடர்
- முயற்சியாளரின் அறிவு, தேர்ச்சி மற்றும் பற்று
- போட்டித்தன்மை
- ஊழியர்களைப் பெறுவதற்கான ஆற்றல்
- மூலப்பொருளைப் பெறுவதிலுள்ள வசதி
- அரச சட்டதிட்டம், கொள்கை, ஊக்குவிப்பு
- விரிவுப்படுத்துவதற்கான வசதி
- தேவையான மூலதனத்தைப் பெறக்கூடிய வசதி

**(1/2 x4 = 02 புள்ளிகள்)**

(v)
- வணிகத்தின் பெயர் , எக் கைத்தொழில்துறை
- சந்தைப்படுத்தல் திட்டத்தின் மிக முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தலும் அதன் சுருக்கமும்
- உற்பத்தித் திட்டத்தின் மிக முக்கியமான விடயங்களை வெளிப்டுத்தலும் அதன் சுருக்கமும்
- நிதித்திட்டத்ததின் மிக முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தலும் அதன் சுருக்கமும்
- நிர்வாகத் திட்டத்ததின் மிக முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தலும் அதன் சுருக்கமும்
- வணிகத்தின் சிறப்புத்தன்மை மிகச் சுருக்கமாக
- வணிகத்திட்டமொன்றை தயாரித்து முன்வைப்பதன் நோக்கங்களும் குறிக்கோள்களும்
- வணிகம், உரிமையாளர் தொடர்பான தகவல்கள்

**(1/2 x4= 02 புள்ளிகள்)**

Q5

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | 2 | 2 | 10/10 |

**6.** (i) வணிகமொன்றின் மீது அக்கறையுடைய **இரண்டு** தரப்பினரைப் பெயரிட்டு, அவர்களது எதிர்பார்ப்புக்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

(ii) அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் **நான்கு** தருக.

(iii) சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள சந்தைப் பகுப்பாய்வுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழமையாகப் பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளைக் குறிப்பிடுக.

(iv) பெண்களை முயற்சியாண்மைக்கு ஊக்குவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** காரணிகளை எழுதுக.

(v) 'இலங்கையில் சிறந்த முயற்சியாண்மைக் கலாசாரத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டின் தற்போதைய பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.' இலங்கையில் தற்போது நிலவும் இரண்டு பிரச்சினைகளின் ஊடாக இக்கூற்றை நியாயப்படுத்துக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

(i)

| அக்கறையுடைய தரப்பினர் | எதிர்பார்ப்புக்கள் |
|---|---|
| உரிமையாளர் | – ஈடுபடுத்திய மூலதனத்திற்கு போதுமான இலாபம் பெறுதல்<br>– ஈடுபடுத்திய மூலதனத்திற்கு பாதுகாப்பு<br>– எதிர்காலப் போக்கு |
| ஊழியர் | – நியாயமான சம்பளத்தை பெறுதல்<br>– தொழில் பாதுகாப்பு<br>– பிற நன்மைகளை பெறுதல் |
| கடன் வழங்குனர் | – வழங்கிய கடன்களை குறித்த காலத்தில் சேகரித்தல்<br>– தொடர்ந்து கடன் வழங்குதல் |
| அரசு | – சட்டவிதிகளுக்கமைய இருத்தல்<br>– வரிபணத்தைப் சரியான முறையில் பெற்றுக்கொள்ளுதல்<br>– தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தல் |
| வாடிக்கையாளர் | – நியாயமான விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல்<br>– தரமான பொருட்களை பெற்றுக் கொள்ளுதல்<br>– தொடர்ச்சியாக பொருட்களை பெற்றுக் கொள்ளுதல் |

**தரப்பினர் இரண்டிற்கு 1/2x2 = 01 புள்ளி**
**எதிர்பார்ப்புக்கள் இரண்டிற்கு 1/2x2 = 01 புள்ளி**
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

(ii) **நிதி சார்ந்த ஊக்குவிப்புக்கள்**

- சலுகை வட்டி விதத்தில் கடன் வசதி வழங்குதல்
- பிணையின்றி கடன் வசதி வழங்குதல்
- கடன்களை மீள செலுத்துவதற்கான கால எல்லையை அதிகரித்தல்
- நிதி அன்பளிப்புக்கள்

**நிதி சாரா ஊக்குவிப்புக்கள்**

- முயற்சியாளருக்கான பயிற்சியளித்தல்
- ஊழியர்களுக்கான பயிற்சிகள்
- விநியோகப் பயிற்சிகள்
- வணிகமொன்றைத் திட்டமிடுவதற்கான ஆலோசனை
- தொழில்நுட்ப பயிற்சிகள்
- பொதியிடல் தொடர்பான அறிவினை வழங்குதல்
- சந்தை வாய்ப்புக்களைத் தேடி கொடுத்தல்

(ஏதாவது நான்கிற்கு 1/2x4= 02 புள்ளிகள்)

**(iii)**
- வாடிக்கையாளர்களுக்கு வினாக்கொத்து வழங்கி விடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- வாடிக்கையாளர்களுடன் நேர்காணலில் ஈடுபடல்.
- சந்தையினுள்ளே வாடிக்கையாளர்கள் கொடுக்கல் வாங்கல் செய்யும் முறையை அவதானிப்புச் செய்தல்.
- பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், தகவல்கள், இணையம் போன்ற மூலங்களை ஆய்வு செய்ததன் மூலம் அறிந்து கொள்ளல்.

(1/2 x 4 = 02 புள்ளிகள்)

**(iv)**
- சிறந்த பொருளாதார நிலையொன்றை ஏற்படுத்திக் கொள்ளல்
- சனத்தொகையில் அதிகமானவர்கள் பெண்களாக இருத்தல்
- பெண்களுக்கு மத்தியில் தொழிலின்மை அதிகம் காணப்படல்
- பெண்களின் பங்களிப்பு வணிகத்திற்கு அவசியமாகக் காணப்படல்
- பெண்கள் உயர்கல்வியைப் பெற்றுக் கொள்வதில் உள்ள ஆர்வம்.

(1/2 x 4 = 02 புள்ளிகள்)

**(v)**
- வேலையின்மைக்கு தீர்வாக இருத்தல்
- பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ள வேண்டியிருத்தல்
- பயன்படுத்தப்படாத வளங்கள் தாராளமாக காணப்படல்
- புதிய தொழில் வழங்குனர்களை உருவாக்க வேண்டியதாக இருத்தல்
- வருமானப் பகிர்வு முரண்பாடுகளை இழிவுபடுத்த வேண்டியதாக இருத்தல்
- அந்நியச் செலாவணி பிரச்சனையை தீர்க்க வேண்டி இருத்தல்
- இறக்குமதிக்கு பதிலீடுகளை உற்பத்தி செய்ய வேண்டி இருத்தல்
- ஏற்றுமதிக்கான பொருட்கள் சேவைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டி இருத்தல்
- வேறு பொருத்தமான விடைகள்

(1 x 2 = 02 புள்ளிகள்)

Q6

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | 2 | 2 | 10/10 |

7. ரிநுதன் என்பவர் பழுப்பானம் தயாரித்து விற்பனை செய்யும் சிற்றளவு வணிகமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்தார். அவரது வணிகத்தின் முதல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் கீழே தரப்படுகிறது.

| செலவுகள்: | ரூ. |
|---|---|
| மூலப்பொருட்கள் கொள்வனவு ............................ | 40 000 |
| பழுப்பானம் தயாரிப்பவரின் சம்பளம் .................... | 20 000 |
| ஏனைய உற்பத்திச் செலவுகள் ............................ | 10 000 |
| வாடகையும் மின்சாரமும் .................................... | 20 000 |
| விற்பனைச் செலவுகள் ........................................ | 15 000 |
| வங்கிக் கடன் வட்டி ........................................... | 5 000 |
| **வருமானம்:** | |
| விற்பனைகள் ..................................................... | 150 000 |

**வேண்டப்படுவது:**

விற்பனை வருமானம், மொத்த உற்பத்திக் கிரயம், மொத்த உற்பத்தியல்லாத கிரயம் மற்றும் தேறிய இலாபம் ஆகியவற்றைக் காட்டக்கூடியதாக ரிநுதனின் உத்தேச வணிகத்தின் முதல் மாதத்திற்கான எதிர்பார்க்கப்படும் **பெறுபேற்றுக்கான கணிப்பீட்டுக் கூற்றைத்** தயாரிக்குக.

07.

ரிநுதன் பழுப்பான வணிகத்தின் (1/2)

முதல் மாதத்திற்கான உத்தேச பெறுபேற்றினைக் கணிப்பிடும் அட்டவணை / கூற்று (1/2)

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனை வருமானம் (1/2) | | 150 000 (1/2) |
| கழிக்க – **மொத்த உற்பத்திக் கிரயம்** (1/2) | | |
| மூலப்பொருள் கொள்வனவு | 40 000 (1/2) | |
| பழுபானம் தாயரிப்பவரின் செலவுகள் | 20 000 (1/2) | |
| ஏனைய உற்பத்தி செலவுகள் | 10 000 (1/2) | (70 000) (1) |
| கழிக்க– **மொத்த உற்பத்தியல்லாக் கிரயம்** (1/2) | | |
| வாடகையும் மின்சாரமும் | 20 000 (1/2) | |
| விற்பனை செலவுகள் | 15 000 (1/2) | |
| வங்கிக் கடன் வட்டி | 5 000 (1/2) | (40 000) (1) |
| தேறிய இலாபம் (1/2) | | 40 000 (11/2) |

**(மொத்தம் 10 புள்ளிகள்)**